| Roll No. | | | | | | | | | | | | Serial No. of Q. C. A. B. |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|

ಒಟ್ಟು ಪ್ರಶ್ನೆಗಳ ಸಂಖ್ಯೆ : 58 ] [ ಒಟ್ಟು ಮುದ್ರಿತ ಪುಟಗಳ ಸಂಖ್ಯೆ : 40

Total No. of Questions : 58 ] [ Total No. of Printed Pages : 40

**ಸಂಕೇತ ಸಂಖ್ಯೆ : 81-T** **ವಿಷಯ : ಗಣಿತ**

**Code No. : 81-T** **Subject : MATHEMATICS**

( ತಮಿಳು ಭಾಷಾಂತರ / Tamil Version )

ದಿನಾಂಕ : 17. 06. 2013 ] [ Date : 17. 06. 2013

ಸಮಯ : ಬೆಳಿಗ್ಗೆ 9-30 ರಿಂದ ಮಧ್ಯಾಹ್ನ 12-45 ರವರೆಗೆ ] [ Time : 9-30 A.M. to 12-45 P.M.

ಪರಮಾವಧಿ ಅಂಕಗಳು : 100 ] [ Max. Marks : 100

**FOR OFFICE USE ONLY**

| Q. No. | Marks | Q. No. | Marks | Q. No. | Marks | Q. No. | Marks | Q. No. | Marks |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | | 14. | | 27. | | 40. | | 53. | |
| 2. | | 15. | | 28. | | 41. | | 54. | |
| 3. | | 16. | | 29. | | 42. | | 55. | |
| 4. | | 17. | | 30. | | 43. | | 56. | |
| 5. | | 18. | | 31. | | 44. | | 57. | |
| 6. | | 19. | | 32. | | 45. | | 58. | |
| 7. | | 20. | | 33. | | 46. | | × | |
| 8. | | 21. | | 34. | | 47. | | × | |
| 9. | | 22. | | 35. | | 48. | | × | |
| 10. | | 23. | | 36. | | 49. | | × | |
| 11. | | 24. | | 37. | | 50. | | × | |
| 12. | | 25. | | 38. | | 51. | | × | |
| 13. | | 26. | | 39. | | 52. | | × | |
| | | | | | | | | ***Total Marks*** | |

| **Total Marks in words** | | **Grand Total** | |
|---|---|---|---|

| | | | |
|---|---|---|---|
| 1. ✓ | | | |
| 2. ✓ | | ✓ | ✓ |
| *Signature of Evaluators* | *Registration No.* | *Signature of the Deputy Chief* | *Signature of the Room Invigilator* |

112730 [ Turn over

*பொதுவான குறிப்புகள் :*

i) இந்த வினா-விடைத்தாள் தொகுப்பில் பல்வகை விடை-வினா வகை ( Objective type ) வினாக்கள் மற்றும் விடைகளை எழுதும் வகை வினாக்கள் ( Subjective type ) என மொத்தம் 58 வினாக்கள் உள்ளன.

ii) பல்வகை விடை-வினா வகை வினாக்களுக்கு ( Objective type questions ) விடை எழுதுவதற்கான இடம் ஒதுக்கப்பட்டுள்ளது. நீங்கள் ஒதுக்கப்பட்டுள்ள இடத்திற்குள்ளாகவே விடையளிக்க வேண்டும்.

iii) விடைகளை எழுதும் வகை வினாக்களுக்கென ( Subjective type questions ) ஒவ்வொரு வினாவிற்கும் இடம் ஒதுக்கப்பட்டுள்ளது. நீங்கள் ஒதுக்கப்பட்ட இடத்திலேயே விடையளிக்க வேண்டும்.

iv) பல்வகை விடை-வினா வகை ( Objective type ) மற்றும் எழுதும் வகை வினாக்களுக் ( Subjective type ) கென வழங்கப்பட்டுள்ள குறிப்புகளை கவனமாக கடைப்பிடிக்கவும்.

v) மாணாக்கர்கள் விடைகளை பென்சிலால் எழுதுதல் கூடாது ( வரைபடங்கள், படங்கள், மேப்புகளை தவிர ). இவ்விதியை மீறி பென்சிலால் எழுதப்பட்ட விடைகள் மதிப்பீடு செய்யப்பட மாட்டாது.

vi) பல்வகை விடை-வினா வகை வினாக்கள், கோடிட்ட இடங்களை நிரப்புதல், மற்றும் பொருத்துக போன்ற வினாக்களில் அழித்து எழுதுதல் / சுரண்டுதல் / குறியிடுதல்கள் போன்றவை அனுமதிக்கப்படமாட்டாது. இவ்விதியை மீறினால் மதிப்பீடு செய்யப்படமாட்டாது.

vii) மாணாக்கர்களுக்கு வினாத்தாளை படிப்பதற்கென 15 நிமிடங்கள் கூடுதலாக வழங்கப்பட்டுள்ளது.

viii) ஒவ்வொரு பக்கத்தின் அடியிலும் கணக்குகளை செய்து பார்ப்பதற்கென இடம் **( Space for Rough Work )** ஒதுக்கப்பட்டுள்ளது.

I. கீழ்வரும் ஒவ்வொரு வினாவிற்கும் / முழுமை பெறாத கூற்றுகளுக்கும் ( Incomplete statements ) நான்கு மாற்று விடைகள் தரப்பட்டுள்ளன. இவற்றுள் ஒன்று மட்டுமே மிகச் சரியானது அல்லது பொருத்தமானது. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து, அதற்கென தரப்பட்டுள்ள குறியீட்டு எழுத்துடன் முழுமையாக எழுத வேண்டும். $20 \times 1 = 20$

1. அனைத்து கணம் $U = \{0, 1, 2, 3, 4, 5, 6, 7, 8, 9\}$ மற்றும் $A = \{0, 1, 3, 5, 7\}$ எனில் $U - A$ எதற்குச் சமம் ?

   (A) $\{0, 2, 3, 4, 6, 8, 9\}$

   (B) $\{0, 2, 4, 6, 8\}$

   (C) $\{2, 4, 6, 8\}$

   (D) $\{2, 4, 6, 8, 9\}$.

*விடை :* ____________________

**( SPACE FOR ROUGH WORK )**

2. 2, 1 + $x$, 10 ஆகியவைகள் ஒரு இசைத் தொடர் ( Harmonic Progression ) எனில் $x$-ன் மதிப்பு

(A) $\frac{1}{3}$ (B) $\frac{7}{3}$

(C) $\frac{9}{3}$ (D) 10.

விடை : ____________________

3. $A = [\ 1\ 2\ 3\ ]$ மற்றும் $B = \begin{bmatrix} 4 \\ 5 \\ 6 \end{bmatrix}$ எனில் $BA$ வின் வரிசை ( Order )

(A) $1 \times 1$ (B) $3 \times 3$

(C) $1 \times 3$ (D) $3 \times 1$.

விடை : ____________________

4. 'CONFUSE' என்ற சொல்லில் உள்ள எழுத்துக்களை எத்தனை விதமாக சேர்க்கலாம் ( Number of combination ) ?

(A) 1 (B) 8

(C) 8 ! (D) 336.

விடை : ____________________

5. $\left(8x^3 - 1\right)$ மற்றும் $\left(4x^2 + 2x + 1\right)$ இவற்றின் அ.பொ.ம ( L.C.M. )

(A) $8x^3 + 1$ (B) $8x^3 - 1$

(C) $4x^2 + 2x + 1$ (D) $2x - 1$.

விடை : ____________________

**( SPACE FOR ROUGH WORK )**

6. மூன்று எண்களின் சராசரி 5. முதல் இரண்டு எண்களின் கூடுதல் 6 எனில் மூன்றாவது எண்

(A) 5 (B) 9

(C) 15 (D) 21.

*விடை :* ____________________

7. $\sum_{a,\,b,\,c} a^2 + \sum_{a,\,b,\,c} 2ab$ எதற்குச் சமம் ?

(A) $a^2 + b^2 + c^2$ (B) $(a+b)^2$

(C) $(a+b+c)^2$ (D) $a^2 + b - c + b^2 + c - a$.

*விடை :* ____________________

8. $\sum_{a,\,b,\,c} a = 0$ எனில் $\sum_{a,\,b,\,c} a^3$ இன் மதிப்பு

(A) 0 (B) 1

(C) $-3abc$ (D) $3abc$.

*விடை :* ____________________

9. $a + b + c = 0$ எனில் $a - b - c$ யின் மதிப்பு

(A) $-2a$ (B) $2a$

(C) $2b$ (D) $2c$.

*விடை :* ____________________

10. $a\sqrt{b} = \sqrt{128}$ மற்றும் $a = 8$ எனில் $b$-ன் மதிப்பு

(A) $\sqrt{2}$ (B) 2

(C) $\sqrt{64}$ (D) 128.

*விடை :* ____________________

**( SPACE FOR ROUGH WORK )**

11. பின்வருபவனவற்றுள் ஒத்த விகிதமுறா மூலங்கள் ( like surds ) கொண்ட இணை எது ?

(A) $\sqrt{2}, \sqrt{8}$ (B) $\sqrt{2}, \sqrt{3}$

(C) $\sqrt[3]{2}, \sqrt{2}$ (D) $4\sqrt{3}, \sqrt[3]{4}$

*விடை :* ______________________________________________

12. 1 மற்றும் – 1 ஆகியவற்றை மூலங்களாக கொண்ட சமன்பாடு எது ?

(A) $x^2 - x - 1 = 0$ (B) $x^2 + 1 = 0$

(C) $x^2 = 1$ (D) $x^2 + x + 1 = 0$.

*விடை :* ______________________________________________

13. $4x^2 - 4x + 1 = 0$ என்ற சமன்பாட்டில் பண்புகாட்டியின் ( Discriminant ) மதிப்பு

(A) – 8 (B) – 12

(C) 32 (D) 0.

*விடை :* ______________________________________________

14. $5 \otimes_{11} 10$ என்பதன் பெருக்குத் தொகை

(A) 6 (B) 50

(C) 55 (D) 110.

*விடை :* ______________________________________________

15. $(3 \oplus_7 6) \oplus_7 4$ என்பதன் கூடுதல்

(A) 16 (B) 13

(C) 7 (D) 6.

*விடை :* ______________________________________________

**( SPACE FOR ROUGH WORK )**

16. $\Delta ABC \;|||\; \Delta DEF$. $\hat{A} = \hat{D}$ மற்றும் $\hat{B} = \hat{E}$ எனில் $\dfrac{\Delta ABC \text{ யின் பரப்பு}}{\Delta DEF \text{ யின் பரப்பு}}$ எதற்கு சமம் ?

(A) $\dfrac{AC^2}{DF^2}$ (B) $\dfrac{AB^2}{DF^2}$

(C) $\dfrac{AC^2}{EF^2}$ (D) $\dfrac{BC^2}{DE^2}$.

*விடை :* __________


17. ஒரு சதுரத்தின் மூலைவிட்டம் $d$ அலகுகள். எனில் அச்சதுரத்தின் பரப்பளவு

(A) $\dfrac{d}{\sqrt{2}}$ (B) $\dfrac{d^2}{\sqrt{2}}$

(C) $\dfrac{d^2}{2}$ (D) $\dfrac{2}{d^2}$.

*விடை :* __________

18. ஒரு வட்டத்திற்கு வெளியே உள்ள புள்ளி $P$ யிலிருந்து $PQ$ மற்றும் $PR$ என்ற தொடுகோடுகள் வரையப்படுகின்றன. $PQ$ = 9 cm மற்றும் $P\hat{Q}R$ = 60° எனில் $QR$ என்ற நாணின் நீளம்





(A) 4·5 cm (B) 6 cm

(C) 9 cm (D) 18 cm.

*விடை :* __________

( SPACE FOR ROUGH WORK )

19. முறையே 8 செ.மீ. மற்றும் 5 செ.மீ. ஆரங்களை கொண்ட இரு வட்டங்கள் ( $A$ மற்றும் $B$ ) படத்தில் காட்டியுள்ளவாறு வெளிப்புறமாக ஒன்றையொன்று தொட்டுக்கொண்டுள்ளன. எனில் $PQ$ என்ற பொதுத் தொடுகோட்டின் நீளம்





(A) $16\sqrt{10}$ செ.மீ (B) $4\sqrt{10}$ செ.மீ

(C) $10\sqrt{16}$ செ.மீ (D) $2\sqrt{10}$ செ.மீ.

விடை : ____________________

20. கொடுக்கப்பட்டுள்ள படத்தில், $TA$ மற்றும் $TB$ ஆகியவை $T$ என்ற வெளிப்புற புள்ளியிலிருந்து வரையப்பட்ட தொடுகோடுகள். $PQ$ என்பது $S$ என்ற இடத்திலுள்ள மற்றொரு தொடுகோடு. $\Delta PTQ$-யின் சுற்றளவு 20 செ.மீ எனில் $AT$ யின் நீளம்




(A) 8 செ.மீ (B) 10 செ.மீ

(C) 16 செ.மீ (D) 20 செ.மீ.

விடை : ____________________

**( SPACE FOR ROUGH WORK )**

II. கோடிட்ட இடங்களை தகுந்த விடைகளைக் கொண்டு நிரப்புக : $10 \times 1 = 10$

21. $A$ மற்றும் $B$ ஆகியவை $A - B = A$ என்ற வகையில் வெற்றல்லாத கணங்கள் ( Non-empty sets ) எனில் $A \cap B =$ ............... .

*விடை :* ______________________

22. $(AB)^{l} = \begin{bmatrix} 2 & 3 \\ 5 & 6 \end{bmatrix}$ எனில் $B^{l}\ A^{l}$ ............... .

*விடை :* ______________________

23. ${}^{5}C_{0}$ என்பதன் மதிப்பு ............... .

*விடை :* ______________________

24. $a\sqrt{b} + c$ யின் இணை ( Conjugate ) ............... .

*விடை :* ______________________

25. $x^{2} + 5x - 9 = 0$ என்ற சமன்பாட்டின் மூலங்களின் கூடுதல் ............... .

*விடை :* ______________________

**( SPACE FOR ROUGH WORK )**

26. $x^2 = 3x + 5$ என்ற இருபடிச்சமன்பாட்டின் தர வடிவம் ( Standard form ) ............... .

*விடை :* ____________________________________________

27. ஒத்த மையத்தையும் வேறுபட்ட ஆர அளவுகளைக் கொண்ட வட்டங்கள் ............... என அழைக்கப்படுகின்றன.

*விடை :* ____________________________________________

28. முக்கோணத்தின் ஒரு பக்கத்திற்கு இணையாக வரையப்படும் ஒரு நேர்கோடானது மற்ற இருபக்கங்களையும் ............... ஆக பிரிக்கும்.

*விடை :* ____________________________________________

29. ஒரு கோளத்தின் புறப்பரப்பை காண உதவும் சூத்திரம் ............... .

*விடை :* ____________________________________________

30. ஒரு எண்முகியின் ( Octohedron ) ஒவ்வொரு முகத்தின் வடிவம் ............... .

*விடை :* ____________________________________________

**( SPACE FOR ROUGH WORK )**

III. 31. ஒரு பெருக்கல் தொடரில் ( Geometric progression ) 5 உறுப்புக்கள் உள்ளன. மூன்றாவது உறுப்பு 4 எனில் அதன் உறுப்புக்களின் பெருக்குத்தொகையை காண்க. 2

( SPACE FOR ROUGH WORK )

32. ஒரு பெருக்கல் தொடரில் முதல் உறுப்பு 3 மற்றும் பொது விகிதம் 2. எனில் முதல் ஆறு உறுப்புக்களின் கூடுதலை தகுந்த சூத்திரம் கொண்டு காண்க. 2

**( SPACE FOR ROUGH WORK )**

33. இரு எண்களின் கூட்டுச்சராசரி ( Arithmetic mean ) மற்றும் இசைச்சராசரி ( Harmonic mean ) முறையே 8 மற்றும் 5 எனில் அவற்றின் பெருக்குச் சராசரியை ( Geometric mean ) காண்க. 2

( SPACE FOR ROUGH WORK )

34. $A = \begin{bmatrix} 2 & 5 \\ -1 & 0 \end{bmatrix}$ மற்றும் $B = \begin{bmatrix} 3 & 2 \\ -2 & 4 \end{bmatrix}$ எனில் $A + \frac{1}{2} X = B$ என்ற சமன்பாட்டில் $X$-ஐ காண்க. 2

**( SPACE FOR ROUGH WORK )**

35. a) அடிப்படையான எண்ணிக்கை தத்துவம் ( Fundamental counting principle )

b) ${}^{n}P_{r}$ என்பதன் பொருளை தருக. 2

( SPACE FOR ROUGH WORK )

36. $^{25}C_{n+5} = {}^{25}C_{2n-1}$ எனில் $n$-ஐ காண்க. 2

( SPACE FOR ROUGH WORK )

37. இரு கோவைகளின் ( Expressions ) உ.பொ.கா. ( H.C.F. ) மற்றும் அ.பொ.ம ( L.C.M. ) முறையே ( $m - 7$ ) மற்றும் $\left(m^3 - 10m^2 + 11m + 70\right)$. ஒரு கோவை ( expression ) $\left(m^2 - 12m + 35\right)$ எனில் மற்றொரு கோவையை காண்க. 2

**( SPACE FOR ROUGH WORK )**

38. தொகுதியை விகிதமுறச் செய்து பின்வருவதை எளிமைப்படுத்துக.

$$\frac{\sqrt{5}+\sqrt{3}}{\sqrt{5}-\sqrt{3}}$$ 2

**( SPACE FOR ROUGH WORK )**

39. $x^2 + px + q = 0$ என்பதன் ஒரு மூலம் மற்றொன்றை விட 3 மடங்கு எனில் $3p^2 = 16q$ என நிறுவுக. 2

( **SPACE FOR ROUGH WORK** )

40. தூய இருபடிச் சமன்பாடு என்றால் என்ன ? ஒரு உதாரணம் தருக. 2

**( SPACE FOR ROUGH WORK )**

41. $p^2 + 1 = 8p$ என்ற சமன்பாட்டை சூத்திரத்தை பயன்படுத்தி தீர்க்க. 2

**( SPACE FOR ROUGH WORK )**


42. $x^2 - 2x + 3 = 0$ என்ற சமன்பாட்டின் மூலங்கள் $m$ மற்றும் $n$ எனில் $\frac{1}{m^2} + \frac{1}{n^2}$-இன் மதிப்பை காண். 2

( SPACE FOR ROUGH WORK )

43. 3 செ.மீ ஆரம் கொண்ட ஒரு வட்டத்தை வரையவும். இதற்கு இரு தொடுகோடுகள், அவற்றுக்கிடையே 50° இருக்குமாறு வரையவும். 2

( SPACE FOR ROUGH WORK )

44. ஒரு கூடாரம் ( Tent ) ஆனது 3 மீ உயரம் உள்ள உருளை வடிவிலும் அதற்கு மேல் கூம்பு வடிவிலும் படத்தில் காண்பிக்கப்பட்டவாறு உள்ளது. இதன் விட்டம் 105 மீ மற்றும் கூம்பின் சாயுயரம் 53 மீ எனில் இக்கூடாரத்திற்கு தேவையான கேன்வாஸ் துணி ( Canvas )-யின் மொத்த புறப்பரப்பளவை காண்க. 2




( SPACE FOR ROUGH WORK )

45. 7 செ.மீ ஆரமும் 18 செ.மீ உயரமும் கொண்ட கூம்பின் கொள்ளளவை காண்க. 2

( SPACE FOR ROUGH WORK )

46. நில அளவையாளரின் ( Surveyor ) களப்புத்தகத்தில் உள்ள பதிவுகளின் படி நிலத்தின் படத்தை வரைக. 2

[ அளவு ( Scale ) : 25 மீ = 1 செ.மீ ]

| | D க்கு ( மீட்டரில் ) | |
|---|---|---|
| | 300 | |
| | 200 | C க்கு 100 |
| E க்கு 75 | 150 | B க்கு 75 |
| | A யிலிருந்து | |

**( SPACE FOR ROUGH WORK )**

47. a) ஒரு வலையமைப்பின் ஊடு வெட்டுத்தன்மை ( Traversability ) என்பதன் பொருள் என்ன ?

b) ஒரு வலையமைப்பு ஊடுவெட்டுத் தன்மையுடையதாக இருக்க தேவையான இரு நிபந்தனைகளைக் குறிப்பிடுக. 2

**( SPACE FOR ROUGH WORK )**

48. கொடுக்கப்பட்ட அணிக்கு ( Matrix ) வலையமைப்பை ( Network ) வரைக. 2

$$\begin{bmatrix} 2 & 1 & 1 \\ 1 & 2 & 1 \\ 1 & 1 & 2 \end{bmatrix}$$

**( SPACE FOR ROUGH WORK )**

IV. 49. ஒரு வகுப்பில் 60 மாணாக்கர்கள் உள்ளனர். மேலும் ஒவ்வொரு மாணாக்கரும் கன்னடம் மற்றும் ஆங்கிலம் இவற்றில் குறைந்தது ஒன்றையாவது கற்க வேண்டும். 45 மாணாக்கர்கள் கன்னடமும் 30 மாணாக்கர்கள் ஆங்கிலமும் தேர்ந்தெடுத்து இருந்தால், இரண்டையுமே ( கன்னடம் மற்றும் ஆங்கிலம் ) தேர்ந்தெடுத்த மாணாக்கர்கள் எத்தனை பேர் ? ஆங்கிலத்தை மட்டும் தேர்ந்தெடுத்த மாணாக்கர்கள் எத்தனை பேர் ? 3

**( SPACE FOR ROUGH WORK )**

50. கீழ்க்கண்ட அலைவெண் பரவல் ( Frequency distribution ) 15 தொழிலாளர்களின் தினக்கூலியைப் பற்றி காண்பிக்கிறது. இதன் கூட்டுச்சராசரி மற்றும் திட்டவிலக்கம் காண்க. 3

| கூலி ( ரூ. வில் )<br>( குழு இடைவெளி *C.I.* ) | 30 – 40 | 40 – 50 | 50 – 60 | 60 – 70 | 70 – 80 |
|---|---|---|---|---|---|
| தொழிலாளர்களின்<br>எண்ணிக்கை ( அலைவெண் $f$ ) | 2 | 3 | 5 | 3 | 2 |

**( SPACE FOR ROUGH WORK )**

51. $m^3 - 3m^2 - 10m + 24$ மற்றும் $m^3 - 2m^2 - 9m + 18$ இவற்றின் அ.பொ.ம. ( L.C.M. )-வை வகுத்தல் முறையில் ( Division method ) காண்க. 3

( SPACE FOR ROUGH WORK )


( SPACE FOR ROUGH WORK )

52. $a + b + c = 0$ எனில்

$$\frac{a^2}{a^2 - bc} + \frac{b^2}{b^2 - ca} + \frac{c^2}{c^2 - ab} = 2$$ என நிறுவுக. 3

( SPACE FOR ROUGH WORK )

53. $\Delta\ ABC$ யில் $AD$ என்ற குத்துக்கோடு $A$ யிலிருந்து $BC$ க்கு வரையப்படுகிறது. மற்றும் $DB : CD = 2 : 1$ எனில் $BC^2 = 3\left(AB^2 - AC^2\right)$ என நிறுவுக. 3




( SPACE FOR ROUGH WORK )

54. இரண்டு வட்டங்கள் ஒன்றையொன்று வெளிப்புறமாக தொட்டுக் கொண்டிருந்தால், தொடும் புள்ளிகள் மற்றும் வட்டத்தின் மையங்கள் ஒரே நேர்க்கோட்டில் அமையும் என நிறுவுக. 3

**( SPACE FOR ROUGH WORK )**

V. 55. ஒரு கூட்டுத்தொடர் வரிசையில் மூன்று உறுப்புக்கள் உள்ளன. அவற்றின் கூடுதல் 15 மற்றும் முதல் மற்றும் இறுதி உறுப்புக்களின் இருமடிகளின் ( Squares ) கூடுதல் 58. எனில் தொடரின் உறுப்புக்களை காண்க. 4

( SPACE FOR ROUGH WORK )

56. முறையே 5 செ.மீ மற்றும் 2 செ.மீ ஆரங்களைக் கொண்ட இரு வட்டங்கள், அவற்றின் மையங்களுக்கிடையே 10 செ.மீ இடைவெளி இருக்குமாறு வரைந்து அவற்றுக்கு நேரடியான பொது தொடுகோடுகள் வரையவும். அவற்றின் நீளத்தை அளந்து ஒவ்வொரு பொது தொடுகோட்டின் நீளத்தை குறிப்பிடுக. 4

**( SPACE FOR ROUGH WORK )**

57. ஒத்த முக்கோணங்களின் பரப்பளவானது, அவற்றின் ஒத்த பக்கங்களின் இருமடிக்கு ( Squares ) விகித சமமாக இருக்கும் என நிறுவுக. 4

( SPACE FOR ROUGH WORK )

58. $x^2 - x - 2 = 0$ என்பதை வரைபடம் மூலம் தீர்க்க. 4

( **SPACE FOR ROUGH WORK** )